# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

## தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2019

TE-19-D-2 பாரிசு, 22-12-2018

### தேர்வு தொடர்பான விதிமுறைகளும் நடைமுறைகளும் *

(தனித்தேர்வராகத் தோற்றும் மாணவர்களுக்கானது)

### 01. தேர்வு முறைகள்

வளர்தமிழ் - 1 தொடக்கம் வளர்தமிழ் - 12 வரையான மாணவர்களுக்கு எழுத்துத் தேர்வுடன் புலன்மொழிவளத் தேர்வும் நடைபெறும். இரண்டு தேர்வுகளுக்கும் தோற்றும் நிலையிலேயே தமிழ்மொழிப் பொதுத்தேர்வு முழுமையடைகிறது.

**வளர்தமிழ் 1 தவிர்ந்த, ஏனைய வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் அதற்கு முன்னைய வகுப்பில் சித்தியடைந்திருத்தல் கட்டாயமாகும்.**

**புலன்மொழிவளத் தேர்வு :**

புலன்மொழிவளத் தேர்வு பின்வரும் உள்ளடக்கங்களைக் கொண்டிருக்கும்.

- வளர்தமிழ் - 1 தொடக்கம் வளர்தமிழ் 10 வரை : கேட்டல், பேசுதல், வாசித்தல்
- வளர்தமிழ் - 11, 12 : பேசுதல், வாசித்தல்.

**புலன்மொழிவளத் தேர்வு நாட்கள்**

- **04-05-2019** சனிக்கிழமை
- **05-05-2019** ஞாயிற்றுக்கிழமை
- **12-05-2019** ஞாயிற்றுக்கிழமை

ஆகிய மூன்று நாட்களில் ஏதாவது ஒரு நாள், நேரம், இடம் என்பன புலன்மொழிவளத் தேர்விற்காகத் தங்களுக்கு தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் ஒதுக்கப்படும்.

**புலன்மொழிவளத் தேர்வு நாள், நேரம், இடம் என்பவற்றில் எதுவித மாற்றமும் செய்ய முடியாது.**

**எழுத்துத்தேர்வு : 01-06-2019 சனிக்கிழமை**

வளர்தமிழ் 1 தொடக்கம் 12 வரையான மாணவர்களுக்கு ஒரே நாளில் எழுத்துத் தேர்வு நடைபெறும். ஆனால் நேரங்கள் மாறுபடும். தேர்வு நேரம் தொடர்பான தகவல் உரியகாலத்தில் தேர்வு அனுமதிக் கடிதத்தினூடாக அறிவிக்கப்படும்.

### 02. விண்ணப்ப முடிவு நாள் : 17-02-2019.

### 03. கட்டண விபரங்கள் :

வளர்தமிழ் 1 தொடக்கம் 4 வரை **40 €**

வளர்தமிழ் 5 தொடக்கம் 12 வரை **50 €**

### 04. விண்ணப்ப படிவத்தை பெறுதலும், நிரப்புதலும்

**04-அ. சென்ற ஆண்டு தமிழ்மொழிப் பொதுத்தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பித்தவர்களுக்கு :**

சென்ற ஆண்டு தமிழ்மொழிப் பொதுத்தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பித்துச் சித்தியடைந்தவர்களுக்கு, அதற்கான சான்றிதழுடன் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2019 இற்கான விண்ணப்படிவமும் அவரவர் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதேபோல், சென்ற ஆண்டு தமிழ்மொழிப் பொதுத்தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பித்து தேர்விற்குத்தோற்றத் தவறிய, சித்தியடையாத மாணவர்களுக்கும் தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2019 இற்கான விண்ணப்படிவம் அவரவர் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவர்கள் தங்களுக்குரிய விண்ணப்பப் படிவத்தில் பெயர் மற்றும் தகவல்களைக் கவனமாகச் சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் சிவப்பு எழுதுகோலினால் திருத்தி, இம்முறை தோற்றவுள்ள வகுப்பினை உறுதிப்படுத்தி, கட்டணம் செலுத்தும் முறை பற்றிய தகவல்களையும் குறிப்பிட்டுக் கையொப்பங்களை இடவும்.

ம.ப.பா

முன்பக்கத் தொடர்ச்சி

**04-ஆ. முதன்முறையாகத் தமிழ்மொழிப்பொதுத்தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பிப்பவர்களுக்கு :**
தேர்வு விண்ணப்பப்படிவத்தை தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது **www.tamoulcholai.fr** என்ற எமது இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். தேர்வு விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள தகவல்களை **நீலம் அல்லது கறுப்பு எழுதுகோலினால் தெளிவாக, தனித்தனி எழுத்துகளால்** நிரப்பவும். விண்ணப்பப் படிவத்தில் மாணவரின் அண்மைய ஒளிப்படத்தை ஒட்டவும், மாணவரின் வயதை உறுதிசெய்ய பிறப்புச் சான்றிதழ் அல்லது அடையாள ஆவணம் ஒன்றின் பிரதியை இணைக்கவும்.

## 05. விண்ணப்பங்களை அனுப்புதல் தொடர்பான தகவல்கள்

உங்கள் விண்ணப்பங்களை தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது தபால் மூலமும் அனுப்பலாம். நேரடியாக ஒப்படைப்பதாயின் பணியக நேரத்தினைக் கவனத்தில் கொள்ளவும். கட்டணத்தைக் காசாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தலாம். வங்கியட்டை மூலம் கட்டணம் செலுத்த முடியாது.
தபால் மூலம் அனுப்புவதாயின் TAMOULCHOLAI ASSOCIATION எனும் பெயரில் வரையப்பட்ட காசோலையினை இணைத்து அனுப்பவும்.
தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

## 06. தேர்வு அனுமதிக் கடிதம்

புலன்மொழி வளத்தேர்விற்கும் எழுத்துத் தேர்விற்குமான தனித்தனி அனுமதிக் கடிதங்கள் 14-04-2019 இற்கு முன் கிடைக்கக் கூடிய வகையில் தங்கள் முகவரிக்கு எம்மால் அனுப்பி வைக்கப்படும். தபால் மூலமான காலதாமதங்களுக்கும் தொலைந்துபோதல்களுக்கும் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் பொறுப்பேற்க மாட்டாது. 14-04-2019 இற்குள் தேர்வு அனுமதிக் கடிதம் கிடைக்கவில்லையெனின், தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் அதன் நகலைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 07. தேர்வுகள் நடைபெறும் இடம், நேரம்

தேர்வுகள் நடைபெறும் இடம், நேரம் பற்றிய முழுமையான தகவல்கள் தேர்வு அனுமதிக் கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பப்படும். புலன்மொழிவளத் தேர்விற்கு **30 நிமிடங்கள்** முன்னதாகவும், எழுத்துத் தேர்விற்கு **45 நிமிடங்கள்** முன்னதாகவும் மண்டபத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.
எழுத்துத்தேர்வு ஆரம்பித்து **30 நிமிடங்களுக்கு மேல் தாமதமாக வரும் மாணவர்கள்** தேர்வு மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## 08. தேர்விற்கான சீருடை

தேர்வுகளில் பங்குபற்றும் மாணவர்கள் கறுப்புநிற நீளக்காற்சட்டையும் தனிவெள்ளை மேற்சட்டையும் அணிதல் வேண்டும்.
(தேர்வு மண்டபத்தில் மாணவர்களை இலகுவாக இனங்காண்பதன் பொருட்டு)

## 09. தேர்விற்கு மாணவர்களை அணியஞ் செய்தல்

தேர்வுகள் யாவும் வளர்தமிழ் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், இறுவட்டுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். தேர்விற்கு மாணவர்களை அணியஞ்செய்தற் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களைத் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

## 10. தேர்வுப் பெறுபேறுகள்

தேர்வுப் பெறுபேறுகள் 31-08-2019 இற்கு முன் தங்களுக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பிவைக்கப்படும். பெறுபேறு தொடர்பாக மீளாய்விற்கு விண்ணப்பிக்க முடியும். மீளாய்வு தொடர்பான விபரங்கள் தேர்வுப் பெறுபேற்றுடன் இணைத்து அனுப்பப்படும்.

## 11. தேர்வுச் சான்றிதழ்கள்

தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் தமிழ்மொழிப்பொதுத்தேர்வு - 2020 இற்கான விண்ணப்படிவமும் 31-12-2019 இற்கு முன் தங்களுக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பிவைக்கப்படும்.